Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சிற்பக்கலையில் 108 கரணங்கள்

முனைவர் இரா.ஸ்ரீதர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி,
பண்ருட்டி – 606 107.

75

**ஆய்வு நோக்கம்**

மனிதன் தோற்றுவித்த நுண்கலைகளிலே காலத்தால் முந்தியது நாட்டியக்கலை எனக் கருதப்படுகிறது. உலகில் பல்வேறு நாடுகளில் சமூக, சமய, பண்பாட்டு நிலைக்கேற்ப இக்கலையும் வளர்ந்து வந்துள்ளது. அவ்வாறாக வளர்ந்த நடன கலையின் நிலைகளை தமிழகத்தில் கரணங்கள் என்று அழைக்கப்படுகின்றன. கரணங்கள் பெரும்பாலும் சிவத்தலங்களில் உள்ள இராஜகோபுரத்தில் காணப்படுகின்றன. இவை இடம் பெரும் விதம், நோக்கம், நடனத்தின் குறியீடு, சிவாலயங்களின் கரணத்தின் நிலை, இடம் பெறும் காலம் ஆகியவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்நாட்டில் கோயில் என்றாலே கோபுரங்கள் தான் முக்கிய பங்கு வகிக்கிறது. பெரும்பாலோர் கோவில் என்றாலே கோபுரத்தைத்தான் தன் கண் முன் கொள்வர். அத்தகைய கோபுரம் தோன்றிய வரலாறு, அக்கோபுரத்தில் இடம் பெற்றுள்ள 108 கரண சிற்பங்கள் தோன்றிய காலம், கரணத்தின் இலக்கணம், அதன் வடிவம், பொருள், இடம் பெறும் முறை, சிற்பத்தின் நுட்பம், அதன் வகைகள், கரணங்கள் இடம் பெற்ற கோவில்கள் ஆகியவற்றை கட்டடக்கலை நோக்கில் ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

கரணங்கள், பாடல்பெற்ற சிவத்தலங்கள், பரதநாட்டியம், நாட்டியசாஸ்திரம், பரதமுனி, பாரம்பரிய நடனம், இந்திய நடனம், கரண சிற்பங்கள்.

**முன்னுரை**

மனிதன் தனக்கு மீறிய ஆற்றல் வாய்ந்த சக்தி ஒன்று இருப்பதாகக் கருதுகின்றான். இந்த சக்தியே தன் வாழ்விலும் தன்னையொத்த மாந்தர்கள் வாழ்விலும் ஏற்படும் நன்மை, தீமைகளுக்குக் காரணமாக அமைகிறது என்று நம்புகிறான். தலைமுறை என்பது மனிதர்களுக்கு மட்டும் இல்லாமல் தெய்வங்களுக்கு வழி வழியாக வகுக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும். எனவே தான் தமிழ் மக்களின் தாயகமாகத் திகழும் இத்தமிழ் நாட்டின் தனிப் பெருமைகளின் ஒன்றாக திகழ்வது கோயில்களாகும். இந்த கோயில்கள் அந்தந்த காலத்தின் நிலையையும் சிற்பக்கலையின் சிறப்புகளையும் கோயில் கட்டுவித்த அரசின் புகழையும் எடுத்துக்காட்டும் நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அவ்வாறான சிறப்பு தன்மையுடைய கோயிலில் இடம் பெற்றுள்ள கரணங்கள் குறித்து காணவிருக்கின்றோம்.

**ராஜகோபுரம்**

கோபுரம் என்பது கோயிலின் வாயிலை அலங்கரித்து நிற்கும் கட்டட அமைப்பாகும். இது பண்டைய காலத்தில் இவ்வளவு சிறப்பாக இல்லை. தமிழகத்தில் கோயில் கட்டிடக்கலை பல்லவர் காலத்திலிருந்து தான் காணமுடிகின்றன. மிகவும் தொன்மையான கோபுரம் எனக் குறிப்பிடத்தக்கது கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆண்ட பல்லவ மன்னன் இராஜசிம்மன் எடுத்த கோயில்களில்தான் காணப்படுகின்றன. மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலிலும், காஞ்சி கைலாயநாதர் கோயிலிலும் இவற்றைக் காண்கிறோம். இவ்விரு கோயில்களிலும் கோபுரங்கள் மிகச் சிறியவையாக உள்ளன. கருவறையை அலங்கரிக்கும் விமானம் மிகவும் உயரமாக இருக்க, கோபுரம் மிகமிகச் சிறிதாக உள்ளதைக் காண்கிறோம். "இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து கோயிலின் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப்பெறும் மரபு தொடங்கியது. தில்லையில் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் 12, 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டன. இக்கோபுரங்களின் கீழ்ப்பகுதிகள் கருங்கல்லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டன. இவை ஏழு நிலைகள் உடையவையாகக் கட்டப்பட்டன. ஆதலின் இவை திருநிலை ஏழு கோபுரம் (எழுநிலைக்கோபுரம்) எனப் பெயர் பெற்றன. இக்கோபுரங்கள் சுமார் 100 அடி உயரம்தான் எழுப்பப்பட்டன. அடிப்பகுதி பரந்து கட்டப்பட்டது.

இவ்வாறு எழுப்பப்பட்ட கோபுரங்களில் சில புதிய அமைப்புகளைக் காண்கிறோம். கல்லால் கட்டப்பட்ட கீழ்ப்பகுதி இரு பிரிவுகளாகக் காணப்படுகிறது. இவற்றில் கீழ்ப்பகுதியில் பல பரிவார தெய்வங்களின் உருவங்களும் மேற்பகுதியில் முக்கிய தெய்வத்தின் பல தோற்றங்களும் சிற்பங்களாக இடம்பெற்றுள்ளன. அவற்றின்கீழ் சில கோபுரங்களில் அத்தெய்வங்களின் பெயர்கள் பொறித்து வைக்கப்பட்டுள்ளன. தில்லையில் கீழை மற்றும் மேலைக்கோபுரம், தாராசுரத்தில் வெளிக்கோபுரம் ஆகியவற்றில் அத்தெய்வங்களின் பெயர்கள் பொறித்து வைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மேலும் நுழைவாயிலின் இருமருங்கும் உள்ள நிலைக்கால்களில் பரதநாட்டியத்தில் உள்ள 108 கரணங்கள் சிற்பங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. தில்லையில் கீழைக் கோபுரத்திலும் மேலைக்கோபுரத்திலும் நாட்டியக் கரணங்கள் சிற்பமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பரத மாமுனியின் நாட்டிய நன்னூலில் உள்ள அந்தந்த கரணத்தைக் குறிக்கும் செய்யுட்கள், கல்வெட்டாகக் கீழே பொறிக்கப்பட்டுள்ளன என்று இரா.நாகசாமி தமிழகக் கோயிற் கலைகள் என்னும் நூலில் குறிப்பிடுகிறார்."

**கரணம்**

கரணம் என்ற சொல் இயக்கம் அல்லது செய்கை என்றும் பொருள் தரும். இதனைச் **சொக்கம்** என்றும் **சுத்தநிருத்தம்** என்றும் கூறுவர். தோப்புக் கரணம், குட்டிக் கரணம், கரணம் தப்பினால் மரணம் என்ற வழக்காறுகள் செய்கை என்ற பொருளில் வரும் கரணத்தோடு இணைந்த சொற்களாக அமைந்துள்ளன. உடல் உறுப்புகளால் செய்யும் செய்கை கரணம் என்று அழைக்கப்படுகின்றது. குறிப்பாக, கரணங்கள் செய்யப்படும் செய்கையைக் குறிக்கும். கர+அண்+அம்

= கரணம். கரணத்தால் செய்யப்படும் செய்கைகள் என்று **தமிழிசைக் கலைக் களஞ்சியத் தொகுதி** II (V.45) விளக்கம் அளிக்கிறது.

**கரண வகைகள்**

கரணங்கள் நீண்ட பயிற்சியின் அடிப்படையில் உடலை வருத்திச் செய்யக் கூடிய ஒன்றாகும். இவ்வகையில் அமையும் கரணங்கள் 108 ஆகும். அவை பின்வருவன, 1.மலரிடுகை, 2.நுடங்குகை, 3.நொசிகுறங்கு, 4.கிளிகை நுடக்கம், 5.இணைப்பறடு, 6.உரங்கையொடுக்கம், 7.குறுக்கிடு கையோச்சு, 8.உட்கொடு குறுக்கிடுகை, 9.தட்டுத்தாள், 10.சாய் தட்டுத்தாள், 11.சுழலரை, 12.கையோச்சு, 3.மார்புக் குறுக்கீடுகை, 14.பித்தர் நடம், 15.குறுக்கிடு கைகால், 16.புறக் குறுக்கீடு, 17.சுழற் குறுக்கீடு, 18.நொடிப்பெடுப்பு, 19அரை நேர்பு, 20.அதிர வீசும் கை, 21.நிறைவீச்சு, 22.குறுக்கிடு கால், 23.மருட்கை, 24.அரவச்சம், 25.முன்னக முழங்கால், 26.வளைகால், 27.மத்தளிகை, 28.வீச்சு மத்தளிகை 29.விட்டுத்தட்டல், 30.பிறழ் குறங்கு, 31.சுழலாக்கம், 32.சுழலகம், 33.மென் நடம், 34.கோல் நடம், 35.அரவச்ச வீச்சு, 36.தண்டையாட்டு, 37.பரிகாலசைவு, 38.வண்டாட்டு, 39.சதுரம், 40.அரவோச்சு, 41.கோலோச்சு, 42.கொட்டு தேள், 43.இடை நொசிப்புச்சூழல், 44.தேள் இயக்கம், 45.இயங்கிடை, 46. தேள் எழுச்சி, 47.தேளீ, 48.அகல் நடம், 49.சிறகு மெட்டு, 50.பொட்டிடுகை, 51.ஒருகளிப்பு, 52.நொசிப்பு, 53.வளைப்பு, 54.உரம் பெறுகை, 55.வீசு கால் கை, 56.அங்கால் விளக்கம், 57.தாள்ப்பாள், 58.ஒருமுக நடம், 59.சுழலும் நடம், 60.அளவாடுகால் 61.திருப்பகம், 62.இருப்புத் திருப்பு, 63.பக்க வீச்சு, 64.நிலைப்பின்மை, 65.மின்னேர்பு, 66.விரிவியக்கம், 67.முடுகாட்சி, 68.களிறாடல், 69.கொட்டாடல், 70.கலுழவியக்கம், 71.கன்னளி, 72.பரிப்பாடல், 73.பக்க முழங்கால், 74.கழுகியக்கம், 75.துள்ளல் கொட்டு. 76.நுனை, 77.நுனைக்குறிப்பு, 78.நுனைப்பு, 79.திரிகுறங்கு, 80.மயிலநடம், 81.அரவியல், 82.ஓங்கு கால், 83.துள்ளுமான், 84.துள்ளரலியக்கு, 85.நுசுப்பு, 86.நழுவகற்சி, 87.துதிக்கை, 88.ஊர்பு, 89.அரியாடல், 90.கோளரி, 91.திருகு நடம், 92.சார்பியல், 93.தட்டொட்டு, 94.தோற்றம், 95.நெகிழாக்கம், 96.உருக்காட்சி, 97.மறியாடல், 98.குறங்காட்சி, 99.மயக்கு, 100.மாலடி, 101.கலப்பகம், 102.நிலைப்பு, 103.அடியொட்டாடல், 104.காளையாட்டு, 105.எழிற்சுழல், 106.அரவெழுச்சி, 107.உருளி, 108.பூவரு கங்கை என்று கோ.தெய்வநாயகம் தனித்தமிழில் பட்டியலிடுகிறார்.

**சிற்பக்கலையில் கரணங்கள்**

ஆலயங்களில் பல நடன சிற்பங்கள் காணப்பட்டாலும் சில ஆலயங்களில் மட்டும் தான் ஆடல் இலக்கணங்களில் ஒன்றான 108 கரணங்கள் முழுவதும் இடம் பெற்றுள்ளன. தஞ்சாவூர் பெரிய கோவில், சிதம்பர நடராஜர் கோயில், கும்பகோணம் சாரங்கபாணிக் கோயில், திருவதிகை திருத்தலம் ஆகியவை 108 கரணங்களையும் சுமந்து இன்றும் சிறப்பாக அளிக்கின்றன.

தஞ்சை பெரியகோயிலின் கருவறையைச் சுற்றி 11 அடி கனத்துக்கு ஒரு சுற்றுச்சுவர் உள்ளது. அதையடுத்து ஓர் உள்சுற்று அறை காணப்படுகிறது. இதனை "சாந்தாரம்' என்கிறார்கள். இச்சாந்தாரத்தின் வெளிப்புறச்சுவர் 13 அடி கனம் கொண்டது. இந்த உள்சுற்று அறையான சாந்தாரத்தின் அகலம் 6 அடி. இந்த அறையில்தான் சிறப்பு மிக்க சோழர் கால ஓவியங்கள் உள்ளன. மேலுள்ள முதல் தளத்தில்தான் இக்கரணங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் தலையை

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

உயர்த்தாமல் சம மட்டத்திலிருந்து பார்க்கும் வண்ணம் இவை வரிசையாக அமைந்திருக்கின்றன. இத்தளத்தில் கரண சிற்பங்கள் இருப்பது வெளி உலகுக்கு இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை தெரியாமலே இருந்தது. 1954 ஆம் ஆண்டில் தொல்லியல் துறை அலுவலர் கே. ஆர். ஸ்ரீனிவாசன் என்பவரே இதனை முதலில் கண்டுபிடித்தார்.

கரணங்கள் 2 அடி உயரக் கல்லில் புடைப்பாக செதுக்கப்பட்டிருக்கின்றன. 108 கரணங்களுள் முதல் 81 கரணங்களே செதுக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய கரணங்களுக்கான கற்கல் தயார் நிலையில் இருக்கின்றன. என்ன காரணத்தாலோ இவை முழுமைப்படுத்தப்படவில்லை. வெளியிலிருந்து கல்லில் செதுக்கி எடுத்து வந்து ஒட்டாமல், முதலிலேயே சுவற்றில் கருங் கற்களை பதித்து விட்டு பின்பு சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

சிவபெருமான் நான்கு கரங்களுடன் இவற்றை ஆடிக் காட்டுவதாக இவை அமைக்கப் பட்டுள்ளன. சிவகணங்கள் கருவிகளை இசைத்துக் கொண்டோ பார்த்துக் கொண்டோ அருகில் இருக்கின்றன. மலரிடுகை என்னும் முதல் கரணம் முதல் அரவியல் என்னும் 81 வது கரணம் வரை இவை உள்ளன. இங்குள்ள வரிசை முறையே பரத முனி நாட்டிய சாத்திரத்திலும் காணப்படுகிறது.



கும்பகோணம் சாரங்கபாணிக் கோயிலில் பல அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோவிலின் மற்றொரு சிறப்பு இங்குள்ள கோபுரத்தில் நாட்டிய சாஸ்திரத்தின் 108 கரண வகைகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டிருப்பதாகும். சோழர்களால் கட்டப்பட்டது. தஞ்சை நாயக்க மன்னர்களால் இக்கோவிலின் கலைநயம் மிகுந்த சிற்பங்கள் தூண்கள் கொண்ட மண்டபங்கள் இராஜ கோபுரங்கள் கட்டப்பட்டவையாகும்.



தில்லை நடராசர் கோவிலில், “பரதம் வல்லான்” என்று போற்றப்பட்ட காடவகுல மன்னன் கோப்பெருசிங்கனால், 108 கரணங்கள் உரிய குறிப்புகளுடன் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளது. ஆடல் வல்லான்கோயில் இராஜகோபுரத்தில் இந்த 108 கரணங்கள் ஒரு பெண் ஆடும் நிலையில் நான்கு வரிசைகளாக சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513



பண்ருட்டி அருகில், திருவதிகை வீராட்டானேசுவரர் கோயில் திருத்தலம் கிழக்கு நோக்கி அமைக்கப்பட்ட தலமாக உள்ளது. கோயில் ஏறத்தாழ ஏழு ஏக்கருக்கு மேல் நிறுவப்பட்டுள்ளது. இரண்டாம் பிரகாரத்தின் ஏழு நிலைகளுடனும், ஏழு கலசங்களும், 108 கரண சிற்பங்களும் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள இராஜகோபுரம் தரிசிப்பவர்களை புல்லரிக்க செய்கிறது. இராஜகோபுரத்திற்கு முன்னதாகவும் பின்னதாகவும் இரு மண்டபங்கள் எழுப்பப்பட்டுள்ளன. திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலின் முகப்பு வாயிலில் 108 கரணங்களை விளக்கும் சிற்பங்களைக் கண்டு வியந்தேன். மொத்தம் நான்கு பகுதியாக இக்கரணங்கள் செதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியும் மூன்று வரிசைகளைக் கொண்டது. ஒரு வரிசைக்கு 9 என்ற வகையில் 3×9=27 என்ற வகையில் 4x 27 ஆக 108 கரணங்கள் திருவதிகை கோயிலில் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன

**முடிவுரை**

தமிழ் மரபில் உருவான பழங்கால கோவில்கள் கட்டடக்கலையினில் தனிச்சிறப்புடன் திகழ்கின்றது. காலவரன் முறைப்படி நோக்கும் போது சைவஉலகின் கோவிலாகிய சிதம்பரத்திலுள்ள நடராஜர் கோவில் குறிப்பிடதக்கது. கோவில் ஒரு பெரிய நடனக்களஞ்சியமாகும். இதன் நாற்புறத்திலுமுள்ள கோபுரங்களிலே கரணச்சிற்பங்கள் அனைத்தும் உள்ளன. இவற்றிலே கிழக்கு, மேற்குக் கோபுரங்களிலுள்ளவை மிகமுக்கியமானவை இவற்றிலே 108 கரணங்களுக்கான சிற்பங்களும், அவற்றின் கீழே அவற்றிக்கான நாட்டிய சாஸ்திரச் செய்யுட்களும் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே அவற்றை அடையாளம் காணுதல் மிகஎளிதாகும். கோட்பாட்டிற்கும், செய்கைமுறைக்குமுள்ள ஒருமைப்பாடும் தெளிவு. இவற்றின் காலம் கி.பி. 13ம் நூற்றாண்டாகும். இவற்றின் பின் விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரன் கோவில், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் மேலே குறிப்பிட்ட கோவில்கள் ஆகியனவற்றின் கோபுரங்களிலுள்ள கரணசிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. கல்லிலே அழியாத நிலை பெற்ற நிருத்த சிற்பங்கள் சமகால நாட்டியக் கலைஞருக்கும், கரணப்பிரியர்களுக்கும், நாட்டிய வரலாற்று ஆசிரியர்களுக்கும் பல வகையில் பயன் உள்ள வகையில் உள்ளன. குறிப்பாக இவற்றை மீண்டும் நடனக்கலையில் உலகிற்குக் கொண்டுவர விரும்பும் கலைஞர்களுக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கின்றன.

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

**துணை நூற்பட்டியல்**

1. தமிழகக் கோயிற் கலைகள் – முனைவர் இரா. நாகசாமி, மா.சுந்தரமூர்த்தி, தமிழ்நாடு அரசு தொல்லியியல் துறை வெளியீடு. 2014.
2. 108 ஆடலியக்கத தமிழ்ப் பெயரீடும் அமைவுகளும், முனைவர் கோ.தெய்வநாயகம், தமிழ்ப் பல்கலைக்கழகம். 2004.
3. இந்தியக்கலை வரலாறு, புலவர், கோ.தங்கவேலு, தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம், 1976.
4. பரத கலை, வி.சிவசாமி, நியு.ஈரா.பப்ளிகேஷன்ஸ் யாழ்பாணம் 1988.
5. திருத்தலப்புராணம், க.வெ.சித.வெ.வேங்கடாசலம், C.V.CT.V.அறக்கட்டளை வெளியீடு.
6. வழுவூர் முனைவர் தினேஷ்குமார் இணையப்பதிவு. 7.8.2015.
7. தமிழ்நாட்டு கோயிற் கட்டடக்கலை – அ. ராகவன்